### ஆஸ்திரேலிய ஓப்பன் சாம்பியன்ஷிப்பில் வெற்றி பெற்ற

# பெரம்பூர் பிருத்வி சேகருக்குப் பாராட்டு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!



ஆஸ்திரேலிய ஓப்பன் சாம்பியன் ஷிப்பில் வெற்றி பெற்ற பெரம்பூர் பிருத்வி சேகருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:

**அனைத்துத் தடைகளையும் தாண்டி காது கேளாதோர் மற்றும் கேட்கும் திறனில் குறைபாடுடையோருக்கான பிரிவில் ஆஸ்திரேலிய ஓப்பன் சாம்பியன்ஷிப் வென்றுள்ள சென்னை பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற்சாலை ஊழியரான பிருத்வி சேகர் அவர்களுக்கு எனது பாராட்டுகள்!**

**மீள்திறன், திறமை, மனவுறுதி ஆகியவற்றை வெளிப்படுத்தும் உங்கள் வெற்றியானது, சாதனையாளர்கள் சவால்களைத் தமக்கே உரிய பாணியில் எதிர்கொண்டு மேலெழும்புபவர்கள் என்பதற்குச் சான்றாகத் திகழ்ந்து மெய்யான ஊக்கமாக விளங்குகிறது.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.




சென்னை கலைவாணர் அரங்கத்தில் நேற்று (31.01.2024) நடைபெற்ற 6வது கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகள் 2023 நிறைவு விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு, தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் அனுராக்சிங் தாக்கூர் ஆகியோருடன் ஒட்டுமொத்த தொடரில் முறையே முதல் 3 இடங்களை பிடித்த மகாராஷ்டிரா, தமிழ்நாடு மற்றும் ஹரியானா அணிகளுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, ஒன்றிய அரசின் விளையாட்டு செயலாளர் சுஜாதா சதுர்வேதி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, இந்திய விளையாட்டு ஆணையத்தின் தலைமை இயக்குநர் சந்தீப் பிரதான், ஆசிய விளையாட்டுப் போட்டியில் பதக்கம் வென்ற ஸ்கேட்டிங் வீராங்கனை டாக்டர். ஆர்த்தி கஸ்தூரி ராவ் ஆகியோர் உள்ளனர்.

### தேசிய, சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை நடத்த தமிழ்நாட்டுக்கு எல்லாத் தகுதிகளும் இருப்பதற்கு-

# ‘திராவிட மாடல்’ அரசின் செயல்பாடுகளே காரணம்!

## “சிறந்த வீரர்களை உருவாக்க கழக அரசு எப்போதும் துணை நிற்கும்!”

## ‘கேலோ இந்தியா 2023’ போட்டியின் நிறைவு விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

சென்னை, பிப்.2–

**தேசிய, சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை நடத்த தமிழ்நாட்டுக்கு எல்லாத் தகுதிகளும் இருப்பதற்கு திராவிட மாடல் அரசின் செயல்பாடுகளே காரணம் என்றும் சிறந்த வீரர்களை உருவாக்க கழக அரசு எப்போதும் துணை நிற்கும் என்றும் கேலோ இந்தியா 2023 போட்டியின் நிறைவு விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்.**

கேலோ இண்டியா - 2023 போட்டியின் நிறைவு விழா மற்றும் பரிசளிப்பு நிகழ்ச்சி நேற்று மாலை சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், ஒன்றிய தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை, இளையோர் விவகாரம் மற்றும் விளையாட்டு அமைச்சர் அனுராக் சிங் தாக்கூர் இருவரும் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டு பதக்கப்ப பட்டியலில் முதலிடம் பிடித்த மகாராஷ்டிரா, 2ஆம் இடம் பிடித்த தமிழ்நாடு, 3ஆம் இடம் பிடித்த ஹரியானா மாநிலங்களுக்கு கோப்பைகளை வழங்கினர்.

முன்னதாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது :-

“இன்று நாம் எல்லோரும் இங்கு பிரமாண்டமாக நடந்து முடிந்திருக்கிற ‘கேலோ இந்தியா 2023’ போட்டியின் நிறைவு விழாவைக் கொண்டாடுவதற்குக் கூடியிருக்கிறோம்.

இந்திய ஒன்றியத்தின் விளையாட்டுத் துறை தலைநகர் என்ற நிலையை அடைவதற்கு தமிழ்நாட்டுக்கு அனைத்துத் தகுதிகளும் இருக்கிறது என்பதற்கு இந்தப் போட்டிகளை நடத்தியதன் மூலம் மீண்டும் நிரூபித்திருக்கிறோம்.

இந்தப் போட்டிகளை வெற்றிகரமாக நடத்தி முடித்திருப்பதன் மூலம், தமிழ்நாட்டுக்கு தேசிய, சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு அனைத்துத் திறன்களும் உள்ளன என்பது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த 13 நாட்களாக நமது மாநிலம், நாடு முழுவதிலும் இருந்து வந்துள்ள 5 ஆயிரத்து 400க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்களை தங்க வைத்து உபசரிப்பதில் பெருமை அடைந்திருக்கிறது. அவர்கள் தங்களது முழு திறமைகளையும் இங்கே வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

இந்த நேரத்தில் இந்தப் போட்டிகளில் முதலிடம் பிடித்த மகாராஷ்டிரா மாநிலத்துக்கும், இரண்டாமிடம் பிடித்த நமது தமிழ்நாட்டுக்கும், மூன்றாமிடம் பிடித்துள்ள ஹரியானா மாநிலத்துக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### தமிழ்நாட்டுக்கு கிடைத்துள்ள பெருமை!

‘கேலோ இந்தியா’ போட்டி வரலாற்றில் இதுவரை அந்தப் போட்டிகளை நடத்திய மாநிலங்களிலேயே, அதிக அளவிலான வீரர்களைப் பங்கேற்கச் செய்த மாநிலம் என்ற பெருமையை இப்போது தமிழ்நாடு பெற்றிருக்கிறது. இந்தப் போட்டியில் நமது மாநிலத்தில் இருந்து ஏறத்தாழ 600 வீரர்கள் பங்கேற்றுள்ளார்கள்.

அது மட்டுமல்ல, தமிழ்நாட்டு விளையாட்டுத் துறை வரலாற்றில் இதுவரை எத்தனையோ தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்தியிருந்தாலும், அதில் பங்கேற்றிருந்தாலும், பதக்கப் பட்டியலில் இப்போதுதான் முதல் மூன்று இடங்களுக்குள் தமிழ்நாடு வந்துள்ளது.

கடந்த ஓராண்டாக ‘திராவிட மாடல் அரசு’ விளையாட்டுத்துறை மேம்பாட்டுக்காக எடுத்த நடவடிக்கைகளே இந்தச் சாதனைக்குக் காரணம்.

தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் சுமார் 3.71 இலட்சம் பேர் பங்கு கொண்டது, விளையாட்டுத் துறையில் இந்த மாநிலத்துக்கும், மக்களுக்கும் உள்ள ஆர்வத்தையே பிரதிபலிக்கிறது.

### நேர்மையைப் போற்றும் விழா!

இந்த நிகழ்வு, வெறுமனே வீரர்களுக்கு இடையிலான போட்டி மட்டுமே அல்ல. மாறாக, ஒவ்வொரு விளையாட்டு வீரரிடத்திலும் உள்ள திறமைகளை, விளையாட்டுப் போட்டி சார்ந்த நேர்மையைப் போற்றும் விழா.




கிராமப்புறங்களில் உள்ள ஏழை, எளிய விளையாட்டு வீரர் வீராங்கனைகளை அடையாளம் காண்பதற்கான வாய்ப்பாக முதலமைச்சர் கோப்பை போட்டிகள் அமைந்தன. அந்த வீரர்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கான பயிற்சிகளையும் தமிழ்நாடு அரசு வழங்குகிறது. அதன் விளைவாகத்தான் தமிழ்நாடு இன்று ‘கேலோ இந்தியா 2023’ பதக்கப் பட்டியலில் இரண்டாவது இடத்துக்கு வந்துள்ளது.

தொலைநோக்குப் பார்வை கொண்டு எங்களது முதலமைச்சர் அவர்கள், விளையாட்டுத் துறையின் முக்கியத்துவத்தைப் பற்றி தொடர்ந்து பேசி வருகிறார். 2023 ஜூன் மாதம், மணிப்பூரில் உள்ள விளையாட்டு வீரர்கள் தமிழ்நாட்டுக்கு வந்து பயிற்சி பெற அழைப்பு விடுத்தார். மொத்தம் 15 வாள் வீச்சு விளையாட்டு வீரர்கள் இங்கே ஒரு மாதத்துக்கும் மேலாக தங்கியிருந்து பயிற்சி பெற்றார்கள். அதற்கான அனைத்து செலவுகளையும் தமிழ்நாடு அரசே மேற்கொண்டது. அவர்களில் பன்ச் ஷுபம் பாலா சானு மற்றும் சஞ்சிம்பாம் பிக்கி ஆகிய இரண்டு பேர் இந்த கேலோ இண்டியா போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

‘கேலோ இந்தியா 2023’ நிகழ்வு, வழக்கமான விளையாட்டுப் பிரிவுகளோடு, களரிபயட்டு, கட்கா, தங் டா போன்ற பாரம்பரிய விளையாட்டுக்களையும் உள்ளடக்கியதாக இருந்தது.

இதுபோன்ற உயரிய போட்டிகளை நடத்துவதோடு மட்டுமல்லாமல், ‘தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை’ என்ற புதிய முன்னெடுப்பையும் தமிழ்நாடு அரசு எடுத்துள்ளது. அந்த அறக்கட்டளையின் மூலம் பொருளாதார உதவி தேவைப்படும் விளையாட்டு வீரர்களுக்கு உதவுகிறோம்.

### விளையாட்டு வீரர்களுக்கு பொருளாதார உதவி!

அந்த அறக்கட்டளை மூலம் பயனடைந்த வீரர்கள் மொத்தம் 8 பதக்கங்களை ‘கேலோ இந்தியா 2023’ போட்டியில் வென்றிருக்கிறார்கள் என்பதை பெருமிதத்துடன் குறிப்பிட விரும்புகிறேன். அந்த 8 பதக்கங்களில் 5 பதக்கங்கள் தங்கப் பதக்கங்கள் ஆகும்.

குறிப்பாக, அந்த அறக்கட்டளை மூலம் பயனடைந்து, இன்று பதக்கங்களைப் பெற்றிருக்கும் சைக்கிள் போட்டி வீராங்கனைகள் தமிழரசி, தன்யா நந்தா மற்றும் பூஜா ஸ்வேதா ஆகியோருக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மொத்தம் 37 இலட்சம் ரூபாய் ஊக்கத் தொகையை இந்த வீரர்களுக்கு தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது.

விளையாட்டில் ஜொலிப்பதற்கு பணம் இல்லாதது ஒரு தடையாக இருக்கக் கூடாது என்ற நோக்கத்தில் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை செயல்பட்டு வருகிறது.

இப்போதைக்கு ‘கேலோ இந்தியா 2023’ போட்டிகளின் நிறைவு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிற இந்தத் தருணத்தில், இந்தப் போட்டிகளை மிகச் சீரிய முறையில் நடத்த ஒத்துழைப்பு நல்கிய அனைத்து விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள், நிர்வாகிகள் மற்றும் அனைத்துப் பணியாளர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### நேர்மைக்கான துவக்கம்!

இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்று பதக்கங்களை வென்றுள்ள வீரர்களே, உங்களது அர்ப்பணிப்பு, விடாமுயற்சி, உழைப்பு ஆகியவையே மற்றவர்களிடமிருந்து உங்களைத் தனித்துக் காட்டுகிறது. பதக்கங்களையும் விருதுளையும் பெறுவதற்கு நீங்கள் மேடையில் இருக்கும்போது நினைவில் கொள்ளுங்கள், நீங்கள் விளையாட்டு வீரர்கள் மட்டுமல்ல. கூட்டு முயற்சி, அர்ப்பணிப்பு மற்றும் நேர்மையான விளையாட்டு நடத்தை ஆகியவற்றுக்கான தூதுவர்களாகவும் இருக்கிறீர்கள்.

தேசிய அளவிலான பல சாதனைகள் இந்தப் போட்டிகளின் போது முறியடிக்கப்பட்டுள்ளன. ஆயிரத்து 331 அணி அலுவலர்கள், ஆயிரத்து 20 தொழில்நுட்பப் பணியாளர்கள், 455 விளையாட்டுப் பிரிவுகளின் தன்னார்வலர்கள் ஆகியோர் இந்தப் போட்டிகள் சிறந்த முறையில் நடைபெற தங்களின் உழைப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த நேரத்திலே என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் 1,450 பொதுத் தன்னார்வலர்களுக்கும் என்னுடைய நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களின் உழைப்பை நாங்கள் என்றும் மறக்க மாட்டோம்.

‘கேலோ இந்தியா 2023’ போட்டிகள் தமிழ்நாடு விளையாட்டுத் துறையின் மகுடத்தில் இன்னொரு இறகாக இருக்கும். இந்தப் போட்டிகளை நடத்துவதற்கு ஆதரவையும், அனைத்து விதமான உதவிகளையும் வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை மீண்டும் ஒரு முறை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தமிழ்நாடு அரசு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்யா மிஸ்ரா அவர்களுக்கும் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜே.மேகநாத ரெட்டி அவர்களுக்கும் இந்தப் போட்டிகளை தொய்வில்லாமல் நடத்திச் சென்றதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். போலவே இந்திய விளையாட்டு ஆணையம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் ஆகியவற்றின் பணியாளர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்வின் நாயகர்களாக இருக்கும் வீரர்களே, பயிற்சியாளர்களே, விளையாட்டுச் சங்கங்களின் நிர்வாகிகளே, உங்களது அர்ப்பணிப்பு மற்றும் உழைப்பைக் கண்டு நாங்கள் வியக்கிறோம். இதுபோன்ற விளையாட்டுப் போட்டிகளின் வெற்றிக்கு நீங்கள்தான் முக்கியமான காரணம். உங்களது சாதனைகளில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம்.

இந்தப் போட்டிகளை ஆர்வத்துடன் கண்டுகளித்த தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விடுதிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும், இந்த நிகழ்ச்சி குறித்த செய்திகளை மக்களிடம் கொண்டு சேர்த்த ஊடகங்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### திராவிட மாடல் அரசின் எண்ணம்!

இந்தத் தருணத்தில் இங்கே ஓர் அறிவிப்பைச் செய்ய விரும்புகிறேன். நமது தமிழ்நாடு அரசு, விளையாட்டை ஓர் இயக்கமாகவே முன்னெடுத்து வருகிறது. நகரங்களில் இருந்து மட்டுமல்லாமல், கிராமங்களில் இருந்தும் வீரர்கள், அதிலும் பொருளாதாரத்தில் நலிந்த குடும்பங்களில் இருந்தும் விளையாட்டு வீரர்கள் உருவாகி வர வேண்டும் என்பதே இந்த ‘திராவிட மாடல்’ அரசின் எண்ணம்.

அதன் முதற்கட்டமாக, கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, ‘கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ எனும் திட்டத்தை தமிழ்நாட்டில் உள்ள 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊராட்சிகளிலும் தொடங்க இருக்கிறது தமிழ்நாடு அரசு. திருச்சியில் வரும் 7 ஆம் தேதி இந்தத் திட்டத்தை நான் தொடங்கி வைக்கிறேன்.

எப்படி மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவதற்குப் பாடப் புத்தகங்களை நமது அரசு வழங்குகிறதோ, அதே போல விளையாட்டுத் துறையிலும் சிறந்து விளங்க, விளையாட்டு உபகரணங்களை வழங்க இருக்கிறோம். விளையாட்டை மிகவும் நேசித்த கலைஞரின் நூற்றாண்டில், அவர் பெயரிலேயே இவற்றை வழங்க உள்ளோம்.

வெற்றி அடைபவர்களுக்குப் பதக்கங்களும் விருதுகளும் ஓர் அங்கீகாரம் என்றால், போட்டிகளில் பங்கேற்றவர்களுக்கு இந்த அனுபவங்கள்தான் பதக்கம். எனவே உங்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு நீங்கள் வெற்றி வாய்ப்பை நழுவவிட்டிருக்கலாம். ஆனால் உங்களுக்கான களம் அப்படியேதான் இருக்கிறது. உங்கள் திறமைக்கான அங்கீகாரம் வெகுதொலைவில் இல்லை.

‘கேலோ இந்தியா 2023’ போட்டிகள், சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் சாதிக்க இருக்கும் பல வீரர், வீராங்கனைகளை அறிமுகப்படுத்தி உள்ளது. அவர்களின் திறனை மென்மேலும் வளர்த்தெடுத்து, அவர்களை வெற்றியாளர்களாக உருவாக்கிட இந்த அரசு அயராது உழைக்கும். குறிப்பாக, தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர்களுக்கு நம் கழக அரசு எப்போதும் உறுதுணையாக இருக்கும்.

விளையாட்டுத் திறமைகளை தொடர்ந்து ஒளிரட்டும். இந்தப் பயணத்தில் உறுதுணையாக இருந்த அனைவருக்கும் எனது நன்றி. ‘கேலோ இந்தியா’ விளையாட்டுப் போட்டிகளின் பாரம்பரியம், இனி வரும் தலைமுறைகளையும் விளையாட்டுத் துறையை நோக்கி ஈர்க்கட்டும். இந்தப் போட்டிகளின் இலச்சியினையில் உள்ள முழக்கம் சொல்வது போல, ‘வருங்காலம் இங்கே இருக்கிறது!’

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பி.கே. சேகர் பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஐட்ரீம் மூர்த்தி, மயிலை வேலு, பரந்தாமன், முத்துராஜா, ஜோசப் சாமுவேல், ஜே.ஜே.எபினேசர், இந்திய விளையாட்டு ஆணையத்தின் டைரக்டர் ஜெனரல் சந்தீப் பிரதான், செயலர் சுஜாதா சதுர்வேதி, சென்னை மாவட்ட ஆட்சியர் ராஷ்மி சித்தார்த் சாகடே ஐ.ஏ.எஸ், சென்னை மாநகராட்சி துணை மேயர் மகேஷ் குமார், தமிழ்நாடு கிரிக்கெட் அசோசியேஷன் தலைவர் அசோக் சிகாமணி, ஆசிய ஸ்கேட்டிங் விளையாட்டில் பதக்கம் வென்ற டாக்டர் ஆரத்தி கஸ்தூரி ராஜ், தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கத் தலைவர் ஐசரி கணேஷ், தமிழ்நாடு ஹாக்கி யூனிட் தலைவர் சேகர் மனோகரன், பல்வேறு விளையாட்டுச் சங்கங்களின் நிர்வாகிகள், பயிற்சியாளர்கள், வீரர் - வீராங்கனைகள், தமிழ்நாட்டு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விடுதி மாணவமாணவிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




சென்னை கலைவாணர் அரங்கத்தில் நேற்று (31.01.2024) நடைபெற்ற 6வது கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகள் 2023 நிறைவு விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு, தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் அனுராக்சிங் தாக்கூர் ஆகியோர் ஒட்டுமொத்த தொடரில் இரண்டாமிடம் பிடித்த தமிழ்நாடு அணிக்கு கோப்பையை வழங்கினர். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யமிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, ஆகியோர் உள்ளனர்.